(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 387/2019 அ.சா.2

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சிவா |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 15.07.2025.

**(A1 – எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.)**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது அவனியாபுரம் காமராஜர் சாலையில் வசித்து வருகிறேன். ஆட்டோ ஓட்டி வருகிறேன். அ.சா.1 சின்னபேச்சி என்னுடைய சின்னம்மா. இறந்துபோன வினோத் என்னுடைய சின்னம்மாவின் மகன். வினோத் இறந்துவிட்டார். 13.07.2019 ம் தேதி நானும், என் அண்ணனும் சின்னப்பேச்சி வீட்டில் வீட்டிற்கு வெளியே கட்டிலில் தூங்கி கொண்டிருந்தோம். விடியற்காலை 3 மணியளவில் என் சின்னம்மா அழுகும் சத்தம் கேட்டு எழுந்து பார்த்தேன். அப்போது எதிரி கட்டையால் என் அண்ணன் வினோத்-ஐ தலை, நெற்றியிலும் அடித்து கொண்டிருந்தார். நான் எழுந்து விலக்க முயற்சித்தேன். உன்னையும் அடித்துபோட்டுவிடுவேன் என்று என்னை கீழே தள்ளிவிட்டு ஓடிவிட்டார். ஆம்புலன்ஸ் மூலம் என் அண்ணன் வினோத்தை மதுரை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றோம். போலீசார் என் சின்னம்மாவை

ஆஸ்பத்திரியில் வைத்து விசாரித்தார்கள். அதன் பின் போலீசார் என்னை விசாரித்தார்கள். என் அண்ணன் காலை 10 மணியளவில் இறந்துவிட்டார். நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் என்னை விசாரித்தார்கள். எனக்கு எழுத தெரியும். படிக்க தெரியாது. குவிமுச பிரிவு 164-ன் கீழான வாக்குமூலம் சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, வினவப்படுகிறது. 13.07.2019 ம் தேதி அதிகாலை ...... என்பதிலிருந்து அன்றைய தினம் காலை என் அண்ணன் இறந்துவிட்டார் என்பதுவரை குவிமுச பிரிவு 164-ன் கீழான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல் நான் நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் கொடுத்தேனா என்று கேட்டார் அவ்வாறு தான் கொடுத்தேன். அந்த வாக்குமூலத்தை கொடுக்க யாரும் என்னை வற்புறுத்தவில்லை. நானாக தான் கொடுத்தேன். அதில் உள்ள வாசகங்களை எனக்கு படித்து காண்பித்தார்கள். அதில் காணப்படும் சிவா என்ற கையெழுத்துக்கள் என்னுடையது தான். போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் செம்பூரணி குளத்தின் அருகே குடியிருந்து வருகிறேன். என் வீட்டின் சுவற்றை ஒட்டி என் பெரியம்மா வீடு உள்ளது. வீட்டின் வாசலுக்கும் கட்டில் இருந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்று கேட்டால் சுமார் 2 அடி தூரம் இருக்கும். நானும், எனது அண்ணனும் ஒரே கட்டிலில் தான் படுத்திருந்தோம். நான் சொன்னதுபோல் வினோத்துடன் நான் கட்டிலில் படுத்திருக்கவில்லை என்றும், என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றும் சொன்னால் அது சரியல்ல. போலீசார் தரப்பு வழக்கை உறுதிபடுத்துவதற்காக போலீசார் சொல்லிக்கொடுத்து போலீசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. 28.08.2019 ம் தேதி நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க என்னுடன் யார் வந்தார்கள் என்று கேட்டால் என் சின்னம்மா, பாலமுருகன் ஆகியோர்கள் வந்தார்கள். நீதித்துறை நடுவரிடம் இருந்து விசாரிக்க சம்மன் வந்ததா என்று கேட்டால் சம்மன் வந்தது. போலீசார் கூட்டி வந்து தான் என்னை நீதித்துறை நடுவர் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். நான் படுத்திருந்தது இரும்பு கட்டிலா என்று கேட்டால் மரக்கட்டில் அதில் பெட் போட்டிருந்தது. ஆஸ்பத்திரிக்கு என் அண்ணனை கூட்டி போகும்போது நான் போகவில்லை. என் அண்ணன் முகத்தை பார்த்ததும் நான் பயந்துவிட்டேன். அதனால் நான் போகவில்லை. சம்பவம் நடந்ததாக

சொல்லப்படும் சமயத்தில் அந்த இடத்தில் நான் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. போலீசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல

Sd/- சிவா

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.